ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின்
செயல்முறைகள், சென்னை-08
ந.க.எண்.119/அ1/2022 நாள்.22.03.2022

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் - ஒன்றிய அரசினால் 2023 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள 75-வது சுதந்திர தின விழாவினை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு விளையாட்டு சாம்பியன்களுடன் (MEET THE CHAMPIONS) சந்தித்து உரையாடுதல் என்ற திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டத்தில் 75 பள்ளிகளை தேர்வு செய்தல் - அங்கு கல்வி பயிலும் மாணவர்களை கலந்துரையாட ஏதுவாக அனுப்பி வைக்க - சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தல் - தொடர்பாக.

பார்வை : 1 New Delhi, Govt. of India Ministry of Education Lr. No.20-8/2011-IS-12 Dt.01.11.2022.

2 ASPD-I - Samagra Shiksh Message No.1 Dt.18.03.2022.

---

பார்வை (1) இல் காண் கடிதத்திற்கிணங்க மேற்காண் பொருள் சார்ந்து ஒன்றிய அரசின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க 2023 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள 75-வது சுதந்திர தின விழாகொண்டாட்ட நிகழ்ச்சிக்காக ஒன்றிய அளவில் 75 பள்ளிகள் பார்வையிடப்பட்டு அதில் கல்வி பயிலும் மாணவ / மாணவியர்கள் விளையாட்டில் சிறந்து விளங்கிய சாம்பியன்களுடன் (MEET THE CHAMPIONS) கலந்துரையாடல் என்ற நிகழ்ச்சியினை நடத்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளமைக்கு பார்வை (2) இல் கண்டுள்ள கடிதத்தில் உள்ளவாறு தமிழக அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டு போட்டிகளில் சிறந்து விளங்கும் 75 பள்ளிகளை தேர்வு செய்து அதில் கல்வி பயிலும் மாணவ / மாணவியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடையும் வகையில் நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இத்திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தும் விதமாக விளையாட்டில் சிறந்து விளங்கி சேம்பியன் ஆன வாள் சண்டை வீராங்கனை சி.ஏ. பவானிதேவி அவர்களுடன் 25.03.2022 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை சேத்துப்பட்டு, எம்.சி.சி. மேல்நிலைப் பள்ளியில் மாணவ / மாணவியர்களுடன் கலந்துரையாடுவதற்கு ஏதுவாக இணைப்பில் கண்டுள்ளபடி 75 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு பள்ளியிலும் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களில் விளையாட்டில் சிறந்து விளங்கும் 10 மாணவ /

மாணவியர்களையும் அம்மாணவர்களுக்கு ஒரு பொறுப்பு ஆசிரியரையும் தேர்ந்தெடுத்து இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தவறாமல் அனுப்பி வைக்குமாறும், இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ளவிருக்கும் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் விவரங்களை இணைப்பிலுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 23.03.2022 அன்று மாலை 3.00 மணிக்குள் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்த அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இக்கலந்துரையாடலில் பங்குபெறும் இணைப்பில் காண் பள்ளிகள், கீழ்கண்ட ஆசிரியரை தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| Contact Person | Mr. Joseph David Ebinezer,<br>Physical Director,<br>MCC Hr. Sec. School,<br>Chetpet, Chennai -31<br>Cell No.9444147558 |

இணைப்பு : 1. 75 பள்ளிகளின் பெயர் பட்டியல்.

2. படிவம்.

கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

பெறுநர்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாவட்டம்.
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
3. சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. ஆணையர், பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. கூடுதல் திட்ட இயக்குநர்-I, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, எழும்பூர், சென்னை-08 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.